# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

இரும்பபைத் தங்கமாக்கி உலகத்தை வியப்பில் ஆழ்த்திய நாடு நம்நாடு. அல்கெமிஸ்ட்ரி என்ற பெயரில் கிரேக்கரும் ரோமானியரும் இந்த ரசவித்தையைக் கைவரப் பண்ணுவதற்கு எவ்வளவோ முயன்றும் அவர்களால் முடியவில்லை. ஆனால் நம் நாட்டு முன்னோர் இந்த ரசவாதத்தில் மட்டுமல்ல, வைத்யம், ஜோதிடம், மாந்த்ரீகம், ஹோமசித்தி மதலிய எத்தனையே சாதனை களில் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுக் காட்டியிருக்கிறார்கள். இதைத் தத்தம் நாட்டு குறிப்பேடுகளில் எழுதியுள்ள அந்நியநாட்டு யாத்ரிகர்களுக்கு இந்தியர் அடையும் வெற்றியின் ரகசியம் மட்டும் புரியவில்லை. அந்த ரகசியத்தை நாம் அனைவரும் உணரும் வண்ணம் 'முமுக்ஷுப்படி' என்ற ஒரு வைணவ நூல் நமக்கு ஒரு வரியில் விளக்குகிறது. இதை அருளிச் செய்தவர் பிள்ளை லோகாசார்யர் என்பவர். மோட்ச வித்தையின் ரகசியத்தை தன் நூலில் நான்காவது சூத்திரமாகத் தருகிறார்.

"மந்த்ரத்திலும், மந்த்ரத்துக்கு உள்ளீடான வஸ்துவிலும், மந்த்ரப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது" – இதுதான் அந்த ரகசியம். முத்தி ஞானத்துக்கென்று இது ஏற்பட்டதானாலும், இரு சகல உலகியல் வித்யைகளுக்கும் பொருந்தும். ஆசிரியர்கள் மாணவர்களிடம் உதை வாங்கும் செய்தி அடிக்கடி இன்றைய செய்தித்தாள்களில் காணப்படுகிறது. துரோணரைப்போல பொம்மை செய்து ஏகலவ்யன் வழிபட்ட இந்நாட்டில் பள்ளிக்குப் புறப்படும் ஆசிரியர்கள் மாணவர்களால் தமக்கு ஏதும் ஆபத்து நேராத படி வீடு திரும்பவேண்டும் என்று பிரார்த்தனை செய்யும் காலம் இன்று நடைபெறுகிறது. கற்பது எளிது. அதை நடைமுறைக்குக் கொணர்வது அரிது.

ஈர விறகை ஒரு வேதமந்திரம் சொல்லி ஒரு வைதிக மாணவன் உடனே தீப்பற்ற வைத்தான் என்றும், இறந்த உடரை ம்ருத்யுஞ்ஜய மந்த்ரம் சொல்லி ஒருவன் உயிர்ப்பித்தான் என்றும் புராணங்களில் படிக்கிறோம். இப்பொழுது அப்படிப்பட்டவர்கள் எங்காவது இருக்கிறார்களா? ச்யவனருக்கு இளமை தந்த நெல்லிக்காய் லேகியம் இன்று யாருக்கு என்ன அற்புதம் செய்திருக்கிறது? மந்திரங்களால் மழை பெய்ததும், தங்கம் கொட்டியதும், முதுமை மாறியதும், கல்வி அதிகரித்ததும், தெய்வங்கள் தோன்றியதும் இன்பங்கள் பெருகியதும் இப்போது எங்கே? ஆணிவேரை அறுத்து விட்டு அரசமரம் வளரவில்லை என்றால் அது மரத்தின் குற்றமா? எந்த மந்திர சித்திக்கும் அடிப்படைத் தேவை – அந்த மந்திரம், அதை உபதேசித்த குரு, அது வணங்கும் தெய்வம் ஆகிய மூன்றிலும் மாணவனுக்கு அசாதாரண பக்தி இருக்க வேண்டும். இதைத்தான் பிள்ளை லோகாசார்யர் அந்த சூத்திரத்தில் வலியுறுத்துகிறார்.

இன்று எல்லாப் பெருமாள்கோயில் கோபுரங்களிலும் அஷ்டாக்ஷர மந்த்ரம் எழுதப் பட்டு பிரகாசிக்கிறது. ஒலி பெருக்கிகளில் ஒலிக்கிறது. கோயிலுக்கு வருபவர்கள் எல்லோரும் பக்தியோடு அதை உச்சரிக்கிறார்கள். ஆனால் லக்ஷக்கணக்கான பக்தர்களில் இந்த அஷ்டாக்ஷரம் சித்தியான பிரகலாதன் ஒருவனாவது காணப்படுகிறானா? ஏன்? இந்த அஷ்டாக்ஷரம் ஒரு குருவின் மூலமாக அவனுக்கு வரவில்லையே அதுதான் காரணம். குருவில்லா வித்தையும் கொண்டவன் இல்லா கர்ப்பமும் வீண் என்பார்கள். மந்த்ரபக்தி, குருபக்தி, தெய்வத்தின் மேல் ஆசாரநியமங்களுக்குக் கட்டுப்பட்ட ஈடுபாடு இவை இருந்தால்தானே மந்திரம் சித்திக்கும்! இவைதான் பாலைவனத்து நீரூற்றைக் காட்டிலும் அரிதாகி விட்டனவே! பணிவு இல்லை, அடக்கம் இல்லை, பொறுமை இல்லை என்ற இலக்கணங்களோடு வாழும் பக்தர் கூட்டம் எந்த மந்திரத்தில் சித்தி பெறும்? நாரதரே வந்து உபதேசித்தாலும் அது பயன்தருமா?

தன்னம்பிக்கை, தைரியம் ஆகியவற்றுக் கும் அடங்காமைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. இதை அறியாமல் தலைக்கனத்துடன் பணிவின்றி எதையும் அணுகுதல் என்ற கோட்பாட்டை இன்றைய சமுதாயம் நடத்திக் காட்டிக்கொண்டிருக்கிறது.

குருவுக்குத் தன்னை அடிமை என்று கூறிக்கொண்ட நம் முன்னோர்தலைமுறை தேவைக்கு அதிகமான பணிவு காட்டியதாக இன்றைய சமுதாயம் எண்ணுகிறது. தன்வயது, வருணம், அனுபவம் அனைத்தையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு, பால்யரான சடகோபருக்கு முன் கைகட்டி நின்ற மதுர கவிகளும், ஆளவந்தாருடைய ராஜபிளவை நோயைத் தாம் பெற்றுக் கொண்ட மாறநேர் நம்பியும் ‘உந்து மதகளிற்றன்’ பாசுரம் சேவிக்கும்போது தக்க சமயத்தில் கதவைத் திறந்த குருபுத்திரியைச் சேவித்த ராமானுஜரும் நம்பெருமாளை தரிசிப்பதை விட குருவாகிய ராமானுஜருக்குப் பால் காய்ச்சுவதையே பெரிதென்று எண்ணிய கிடாம்பியாச்சானும் இப்படியெல்லாம் இருந்ததால் வாழ்வில் சிறந்து விளங்கிப் பெருமை பெற்றார்களா? அல்லது சின்னாபின்னமாய்ச் சீரழிந்தார்களா? அவர்களுடைய மனப்பாட சக்தியும், தீர்க்க ஆயுளும், ஆரோக்யமும், ஆன்மிக மேன்மை களும் எதிரிகள் கண்டு அஞ்சும் தேஜஸ்ஸும் இன்றைய சவடால் சமுதாயத்திற்கு உண்டா?

அவர்கள் வரலாறு படைத்தார்கள். இவர்கள் வளங்களைப் பழுதாக்குகிறார்கள். பஞ்சமின்றி, நோயின்றி, மோக்ஷத்திற்கு ஈடான ஒரு பூமியை அவர்கள் படைத்திருந் தார்கள். ஆனால் இன்றைய சமூகமோ பருவங்கள் பொய்த்து, தானியங்கள் நசித்து, நோய்கள் மிகப் பெருகி, சச்சரவுகளும் சாவும் மலிந்துள்ள ஒரு இயற்கைச் சூழலை உருவாக்கி யிருக்கிறார்கள்.

அடக்கம்தான் உயர்வின் தொடக்கம். ஆணவம்தான் அழிவுக்கு முதல்படி. வணங்காத தலைகளுக்கு வாழ்வில்லை. அஞ்சுவது அஞ்சாமை பேதமை. எனவே நம் பெரியோர்கள் நடந்து சென்ற பாதையிலே நாம் தொடர்ந்து செல்ல வேண்டும். எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் காட்டிய அனுபவத்தில் அவர்கள் ஒரு நெறிமுறையைக் கடைப்பிடித்தார்கள். நமக்கும் காட்டிச் சென்றார்கள். அதை உதாசீனப்படுத்துவது, மல்லாந்து படுத்து வான் நோக்கி உமிழ்வதற்குச் சமம். நமக்குத் தீங்கு செய்ய நம் வினைகளும், எதிரிகளும் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறபோது நாமே நமக்குத் தீமையைத் தேடிக்கொள்ள வேண்டுமா? இதுதான் பிள்ளைலோகாசார்யர் நமக்குச் சுட்டிக் காட்டுவது!

ஸர்வஜித் ஆனி **கீதாசார்யன்**